2012 ஏப்ரல் 19]

வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

126—

பூங்கா மற்றும் சுற்றுலாப் பேருந்து

***1126—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி கடற்கரைப் பகுதியில் பூங்கா அமைக்கவும், அப்பகுதிக்கு குளிர்சாதனச் சுற்றுலாப் பேருந்து இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கன்னியாகுமரி கடற்கரைப் பகுதியில் பூங்கா அமைக்க வேண்டுமென்றும், அப்பகுதியில் குளிர்சாதனச் சுற்றுலாப் பேருந்து இயக்க வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவருடைய தொகுதியான குளச்சல் தொகுதியில் கடற்கரைப் பகுதியிலே என்ன மேம்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் நேரடியாக வந்து கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் 2003–2004 ஆம் ஆண்டு கன்னியாகுமரியில் மைய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் ஒன்றரை கோடி ரூபாய் அளவிலே பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2003–2004 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் மைய அரசு மூலமாக முட்டம் பகுதிக்கு ஒன்றரை கோடி ரூபாய் அளவிலே ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தற்போது முடிக்கப்பட்டுள்ளன. 2003–2004—ல் விவேகானந்தர் பாறையில் ஒலி—ஒளிக் காட்சி அமைப்பதற்கு 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டு, அந்தப் பணிகளும் தற்போது முடியும் தருவாயில் உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், தொடர்ச்சியாக கன்னியாகுமரி பகுதியிலே சுற்றுலாப்

பயணிகளுக்காக அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்றன. அதற்குப் பிந்தைய ஆட்சிக் காலத்தில் மைய அரசு, மாநில அரசுகளின் நிதியொதுக்கீடு செய்யப்பட்டும், அதிகமான பயன்பாடு இல்லாமல் இருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு அந்தப் பணிகள் எல்லாம் முடுக்கி விடப்பட்டு தற்போது பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய குளச்சல் கடற்கரைப் பகுதி, கன்னியாகுமரியிலிருந்து 42 கிலோ மீட்டர் தொலைவிலும், நாகர்கோவிலிலிருந்து 22 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. டச்சுப் படையினருக்கும், திருவாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மாவுக்கும் குளச்சல் துறைமுகத்தில் நடந்த போரில் மன்னர் வெற்றி வாகை சூடி, டச்சுப் படையைச் சேர்ந்த 4 வீரர்களைக் கைதியாக சிறைப் பிடித்ததாகவும், அந்த வெற்றியை நினைவுபடுத்தும்விதத்தில் குளச்சல் துறைமுகப் பகுதியில் வெற்றித் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அந்தப் பகுதியின் மேம்பாட்டிற்காக 45 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டும், கடந்த ஆட்சியில் அந்தப் பணிகள் நடைபெறவில்லை. தற்போது ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் பூங்கா, குடிநீர், கழிப்பறை, ஓய்வறை அமைக்க அந்தப் பகுதியிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் இந்தக் குளச்சல் நகரம் Town and Country Planning துறையால் "பாரம்பரிய நகரம்" என்று அறிவிக்கப்பட்டது என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

முற்பகல் 10—45

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய குளச்சல் தொகுதிக்குட்பட்ட முட்டம் கடற்கரை கிராமம், ஒரு சுற்றுலா

மையம். அங்கு பல முன்னேற்றப் பணிகள் செய்திருந்தாலும் இப்போது அவை சரியாகப் பயன்படுத்தப்படாத நிலையில் இருப்பதால் அந்தப் பகுதியிலே அவை சிறப்பாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய குளச்சல் தொகுதியில் உள்ள துறைமுகப் பகுதி இயற்கையிலேயே அது அரபிக்கடலை அழகுபடுத்தக்கூடிய பகுதி. மார்த்தாண்ட வர்மா டச்சுப் படையினை வீழ்த்தியதற்கான நினைவுச் சின்னமாக விளங்கும் கல்வெட்டு ஒன்று நகராட்சியின் மையப் பகுதியிலே, நம்முடைய தமிழக மண்ணிலே பதிந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதை மேம்படுத்தும் வகையில் அப்பகுதியை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலாத் தலமாக அமைக்கவும், மேலும், கன்னியாகுமரியினைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து வந்து செல்வதற்கு குளிர்சாதன வசதியுள்ள பேருந்தினை இயக்கவும் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 2003—2004—ல் மைய அரசு மற்றும் மாநில அரசு நிதி உதவித் திட்டத்தில் முட்டம், தெற்குறிச்சி கடற்கரைப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒப்படைக்கப்பட்டு அந்தப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அதேபோல், குளச்சல் பகுதியிலே உள்ள பேருந்து நிலையத்திற்கு அருகிலேயே 1 கி.மீ. அளவிலேயே அந்த நினைவுத் தூண்கள் இருக்கின்றன. நாகர்கோவிலிலிருந்து 22 கி.மீ. தூரத்தில்தான் அந்த குளச்சல் பகுதி இருக்கிறது. அங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி குளிர்சாதன வசதியுடன்கூடிய பேருந்துகளை இயக்கக்கூடிய கருத்துரு இதுவரை பெறப்படவில்லை. இதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வரக்கூடிய அளவிலே உள்ளது என்ற கருத்துரு பெறப்பட்டால், அதை ஆய்வு செய்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.